# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# க.பொ.த (உயர்தரம்) 2020
# பயிற்சிப் பரீட்சை
# பகுதி 11
# வினாக்களுக்கான விடைத்தாள் விளக்கம்
# வணிகக்கல்வி

வினா இல 01

கேசவன் என்பவர் ‘ பிள்ளையார் ரவல்ஸ்’ என்னும் பெயரில் கொழும்பு – யாழ்ப்பாணம் ஊடாக போக்குவரத்தினை மேற்கொள்ளும் பிரயாணிகளுக்கான பேரூந்து சேவை ஒன்றினை நடாத்தி வருகின்றார். இவரது போக்குவரத்து சேவையில் குறைந்த சேவைக்கட்டணம், சொகுசான இருக்கை வசதி, அருகலை வசதி ((Wi-Fi) சாரதி, நடத்துனரின் கண்ணியமான நடத்தை, இணைய மூலமான இருக்கை ஒதுக்கீட்டு வசதி (Online booking), தொலைபேசி வசதி என்பன காணப்படுவதன் காரணத்தால் பிள்ளையார் ரவல்ஸை நாடி வரும் பிரயாணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. இதனால் கேசவன் இலங்கை வங்கியில் கடன் ஒன்றினைப் பெற்று இன்னுமொரு பேரூந்தினை கொள்வனவு செய்து சேவையில் ஈடுபடுத்தினார்.

(அ) பிள்ளையார் ரவல்ஸ் வணிகத்தினால் நிறைவேற்றப்படும் மனித தேவை ஒன்றினையும், மனித விருப்பமொன்றினையும் குறிப்பிடுக.

மனித தேவை:- போக்குவரத்து
மனித விருப்பம்:- தனியார் பேரூந்துச் சேவை ( 1 ×2= 2 புள்ளிகள்)

(ஆ) மேற்படி பிள்ளையார் ரவல்ஸ் வணிகத்தினை கீழ்வரும் நியதிகளின் அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டுக.

(1) உரிமை
(2) உற்பத்தித்தன்மை
(3) நோக்கம்
(4) உற்பத்தித்துறை

(ஆ) (1) தனியார்துறை
(2) மூன்றாம்நிலை
(3) இலாப நோக்கம்
(4) சேவைத்துறை ( ½ ×4= 2 புள்ளிகள்)

ii. பிள்ளையார் ரவல்ஸ் வணிகத்தில் அக்கறை கொள்ளும் தரப்பினர் நால்வரைக் குறிப்பிட்டு அவர்கள் அக்கறை கொள்வதற்கான காரணங்கள் ஒன்று வீதம் தருக.

அக்கறை செலுத்தும் தரப்பினர்


1. உரிமையாளர்:- கேசவன்
2. வாடிக்கையாளர்:- பேரூந்தில் பிரயாணம் செய்வோர்
3. ஊழியர்:- சாரதிகள்
4. நிதி நிறுவனங்கள்:- இலங்கை வங்கி
5. போட்டி நிறுவனங்கள்:- ஏனைய பேரூந்துச் சேவை நடாத்தும் நிறுவனங்கள்
6. அரசு

( ½ ×4= 2 புள்ளிகள்)

❖ அக்கறை செலுத்துவதற்கான காரணங்கள்

உரிமையாளர்:-

1. தான் முதலீடு செய்த தொகைக்கு ஏற்பப் போதுமானளவு இலாபம் கிடைக்கின்றதா என்பதை அறிந்து கொள்ளல்.
2. விருத்தி தொடர்பில் அறிந்து கொள்வதற்கு
3. சந்தைப் பங்கினை அறிந்து கொள்வதற்கு




வாடிக்கையாளர்:-

1. தரமான சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு
2. பொறுப்புக்கள் உரியவாறு நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை அறிந்து கொள்வதற்கு
3. வணிகத்தின் நீண்டகால வாழ்தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு

**ஊழியர்:-**

1. உயர்ந்த சம்பளத்தை பெற்றுக் கொள்வதற்கு
2. ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் கிடைக்குமா என்பதை அறிந்து கொள்வதற்கு

**நிதி நிறுவனங்கள்:-**

1. வழங்கப்பட்ட கடன்களை உரிய காலத்தில் பெற
2. மேலும் கடன்களை வழங்க

**போட்டி நிறுவனங்கள்:-**

1. பேரூந்து சேவைக் கட்டணங்களை தீர்மானித்துக் கொள்ள
2. தகவல்களை அறிந்து கொள்ள

**அரசு:-**

1. வரிகளை அறவிட்டுக் கொள்வதற்கு
2. வரிச் சலுகையினைப் பெற்றுக் கொடுப்பதற்கு
3. வேலை வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கு
4. பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் அளவிடுவதற்கு

( ½ ×4= 2 புள்ளிகள்)

iii.(அ) மேற்படி பிள்ளையார் ரவல்ஸ் மூலம் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு கிடைக்கும் நன்மைகள் நான்கு தருக.


1. மாற்றமடையும் சிக்கலான தேவைகளை நிறைவு செய்தல்
2. புத்துருவாக்கம்
3. தொழில் உருவாக்கம்
4. தேசிய பொருளாதார விருத்தி ( ½ ×4= 2 புள்ளிகள்)

ஆ) கேசவன் தனது போக்குவரத்துச்சேவையில் தற்போது வழங்கும் வசதிகளுக்கு மேலதிகமாக வேறு எவ்வசதிகளை வழங்க முடியும் என நீர் கருதுபவற்றிற்கு இரண்டு உதாரணம் தருக.

(ஆ) மாணவர்களின் பொருத்தமான இரண்டு உதாரணத்திற்கு ( 1 ×2= 2 புள்ளிகள்)

iv. கேசவன் தனது பேருந்து சேவையை விரிவுபடுத்த எண்ணியிருப்பதால் சாரதி, நடத்துனர்களுக்கென ஒழுக்க விழுமியக்கோவை ஒன்றினை கட்டியெழுப்ப விரும்புகின்றார். வணிகக்கல்வி கற்ற மாணவன் என்ற வகையில் ஒழுக்கவிழுமியக்கோவை ஒன்றினை தயாரிப்பதற்கு எவ்வாறான விடயங்களை கவனத்தில்கொள்ளவேண்டும் என்பது தொடர்பாக கேசவனுக்கு ஆலோசனை ஒன்றினை முன்வைக்குக.

1) வணிகம்
2) வாடிக்கையாளர்
3) ஊழியர்
4) போட்டியாளர்
5) சமூகக் கலாசாரம்
6) அமைப்புக் கலாசாரம்
7) நடைமுறை ரீதியானது




(மேற் கூறிய ஆறு விடயங்களை உள்ளடக்கிய விளக்கத்திற்கு 04 புள்ளிகள்)
(நான்கு விடயங்களை உள்ளடக்கிய விளக்கத்திற்கு 03 புள்ளிகள்)
(மூன்று விடயங்களை உள்ளடக்கிய விளக்கத்திற்கு 02 புள்ளிகள்)
(இரண்டு விடயங்களை உள்ளடக்கிய விளக்கத்திற்கு 01 புள்ளி)

v. (அ) ‘ வணிக விருத்திக்காக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவது அரசின் அடிப்படை தொழிற்பாடொன்றாகும்’. அரசு மூலம் பிள்ளையார் ரவல்ஸ் போன்ற வணிகங்களுக்கு வழங்கப்படும் உட்கட்டமைப்பு வசதிகள் நான்கினைப் பெயரிடுக.

(அ) மின்சார வசதி வழங்கல்
வீதி, பாலங்களை அமைத்தல்
வீதி பராமரிப்பு
தொடர்பாடல் வசதிகள் ( ½ ×4= 2 புள்ளிகள்)

(ஆ) கேசவன் இலங்கை வங்கியில் கடனைப்பெறும்போது பொருளாதாரத்தில் வட்டிவீதம் குறைவடைந்து காணப்படுகின்றது எனக் கருதிக்கொள்க. இச்சந்தர்ப்பத்தில் பிள்ளையார் ரவல்ஸ் நிறுவனத்தில் ஏற்படும் சாதகமான தாக்கங்களை விளக்குக.

(ஆ) பொருளாதாரத்தில் வட்டிவீதம் முறையும்போது வணிக வங்கிகளின் வட்டிவீதமும் குறைவடையும். இதன்போது பிள்ளையார் ரவல்ஸ் போன்ற முதலீட்டாளர்கள் வணிக வங்கிகளிலிருந்து பெறும் கடன்களின் அளவு அதிகரிப்பதன் காரணமாக முதலீடுகள் அதிகரிக்கும். அதனூடாக உற்பத்திகள் அதிகரித்து சேவைக் கட்டணங்கள் குறைவடையும். சேவைக்கட்டணம் குறைவடைவதன் காரணமாக பிள்ளையார் ரவல்ஸ் வணிகத்தின் விற்பனைப் புரள்வு அதிகரித்து இலாபம் அதிகரிக்கும்.

(மேற்கூறியவாறு பிள்ளையார் ரவல்ஸ் வணிகத்துடன் தொடர்புபடுத்திய பூரண விளக்கத்திற்கு 02 புள்ளிகள்)

## வினா இல 02

**i. (அ) நுகர்வோர் ஒருவர் பகுத்தறிவுள்ள நுகர்வோராக இருப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடிய நன்மைகள் நான்கினைக் குறிப்பிடுக.**

(அ)

- செலுத்தப்படும் பணத்திற்கு ஏற்ற பெறுமானமுள்ள பொருட்களை பெறமுடிதல்
- தரமான பொருட்களை பெறமுடிதல்
- சந்தை மோசடி, நுகர்வோர் உரிமை மீறல் என்பவற்றை உரிய அதிகாரிகளுக்கு அறியச் செய்தல்
- வாழ்வதற்கான சூழலை பாதுகாக்க முடிதல்
- சமூகம் தொடர்பாக கவனம் செலுத்தி இணக்கப்பாட்டுடன் கருமமாற்ற முடிதல்

( ½ ×4= 2 புள்ளிகள்)

**(ஆ) இலங்கையில் நுகர்வோர் பாதுகாப்பிற்கென தொழிற்படுகின்ற அரச நிறுவனங்கள் நான்கின் பெயர்களைத் தருக.**

(ஆ)

1. நுகர்வோர் அலுவல்கள் தொடர்பிலான அதிகாரசபை
2. இலங்கைத் தரக்கட்டளைகள்பணியகம்
3. அளவை நிறுவை தரநியமச் சேவைத் திணைக்களம்
4. மத்திய சூழல் அதிகாரசபை
5. பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியின் காரியாலயம்
6. மாவட்ட செயலாளர் அலுவலகம்
7. தொலைதொடர்பாடல் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு ( ½ ×4= 2 புள்ளிகள்)

ii.

குமரன், அமரன், கீதன் ஆகிய மூவரும் இணைந்து வணிக முயற்சி ஒன்றினை ஆரம்பிக்க எண்ணுகின்றனர். அதனை ஒரு பங்குடைமையாகவோ? அல்லது வரையறுத்த தனியார் கம்பனியாகவோ? ஆரம்பிப்பது தொடர்பில் முடிவுக்கு வர முடியாத நிலையில் உள்ளனர். வணிகக்கல்வி கற்கும் மாணவர் என்ற வகையில் மேற்குறிப்பிட்ட இருவகையான அமைப்புக்களினதும் அனுகூலங்களையும், பிரதிகூலங்களையும் அவர்களுக்கு எவ்வாறு விளக்குவீர்?

வரையறுத்த தனியார் கம்பனி

| அனுகூலங்கள் | பிரதிகூலங்கள் |
|---|---|
| 1. வரையறுத்த பொறுப்பு<br>2. சட்ட ஆளுமை உண்டு<br>3. நீண்டகால வாழ்வுத்தன்மை<br>4. அதிக மூலதனத்தை திரட்ட முடியும் | 1. அதிக சட்டக்கட்டுப்பாடுகள்<br>2. இலாபம் பலரிடையே பகிரப்படும்<br>3. பொதுமக்களுக்கு பங்குகளை விற்க முடியாமையினால் பங்குச்சந்தையில் பங்குகளை விற்க முடியாது.<br>4. பங்குகளை கைமாற்றம் செய்ய முடியாது |

பங்குடைமை

| அனுகூலங்கள் | பிரதிகூலங்கள் |
|---|---|
| 1. ஆரம்பித்தல் இலகு<br>2. சட்டக்கட்டுப்பாடு குறைவு<br>3. பல்வேறு திறன்களை உடையவர்கள் காணப்படலாம்<br>4. இலாபம் சிலரிடையே பகிரப்படும் | 1. வரையறையற்ற பொறுப்பு<br>2. பங்காளர்களிடையே பிணக்குகள் ஏற்படலாம்<br>3. சட்டஆளுமை இல்லை<br>4. அதிக மூலதனத்தை திரட்ட முடியாமை<br>5. நீண்டகால வாழ்வுத்தன்மை இல்லை |

iii.

(அ) பிணையால் வரையறுத்த கம்பனியின் பண்புகள் நான்கு தருக.

(அ) பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றின் பண்புகள்.

- ❖ பங்குவழங்கல் மேற்கொள்ளப்படுவதில்லை.
- ❖ அகவிதிச்சட்டக்கோவையில ஒவ்வொரு அங்கத்தவரும் கம்பனி கலைக்கப்படுகின்றபோது பங்களிப்புச் செய்யவேண்டிய தொகை குறிப்பிடப்படல் வேண்டும்.
- ❖ ஆகக் குறைந்தது இரு அங்கத்தவர்களாவது இருத்தல் வேண்டும். உச்ச எண்ணிக்கைக்கு வரையறையில்லை.
- ❖ பொதுநோக்கமொன்றினை முன்வைத்து ஆரம்பிக்கப்படல்.
- ❖ கம்பனி இலாபப் பகிர்வினை மேற்கொள்வதில்லை. ( ½ ×4= 2 புள்ளிகள்)

(ஆ) பொதுத்துறை வணிகங்கள் பொதுமக்கள் நலன்கருதியே நடாத்திச் செல்லப்படுகின்றன. அந்தவகையில் அரசு வணிகக்கருமங்களில் ஈடுபடுவதற்கான காரணங்கள் நான்கு தருக.

(ஆ) அரசு வணிகக் கருமங்களில் ஈடுபடுவதற்கான காரணங்கள்

- ❖ தனியார் துறையின் மூலம் பாதகமான முறையில் இலாபத்தை உழைத்தல் போன்ற சந்தை நிலைமைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு
- ❖ சர்வாதிகார நிறுவனங்கள் உருவாவதைத் தடுப்பதற்கு
- ❖ நாட்டின் பாதுகாப்புக் கருதி காணப்பகின்ற பல்வேறு வணிகத்துறைகளை நடத்திச் செல்வதற்கு
- ❖ பொதுமக்களுக்கு நியாயமான விலையில் அத்தியாவசியமான பொருள்கள் சேவைகளை வழங்குவதற்கு
- ❖ வளங்கள் வீண்விரயமாவதை இழிவுபடுத்திக் கொள்வற்கு
- ❖ இலாபமற்ற, தனியார்துறை ஈடுபடாத, பாரியளவு கொண்ட அபிவிருத்தித்திட்டங்களை நடத்திச் செல்ல வேண்டி இருத்தல் ( ½ ×4= 2 புள்ளிகள்)

iv. அரச திணைக்களங்களையும், அரச கூட்டுத்தாபனங்களையும் பின்வரும் அடிப்படையில வேறுபடுத்திக் காட்டுக.

1. உருவாக்கம்
2. சட்டஆளுமை
3. மூலதனமிடும் முறை
4. நிர்வாகம்

| | அரச கூட்டுத்தாபனம் | அரச திணைக்களம் |
|---|---|---|
| ➢ உருவாக்கம் | • விசேட பொதுச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்படல் | • அமைச்சொன்றின் கீழ் நேரடிக் கண்காணிப்பில் உருவாக்கப்படல் |
| ➢ சட்டஆளுமை | • உண்டு | • இல்லை |
| ➢ மூலதனமிடும் முறை | • அரச கடன், பங்கிலாபம், மீள்முதலீடு, பொதுமக்களின் கடன்களின் மூலம் நிதியைத் திரட்டுதல் | • அரசின் வருடாந்த வரவு செலவுத் திட்டம் மூலம் நிதியைத் திரட்டுதல் |
| ➢ நிர்வாகம் | • அரசினால் நியமிக்கப்படும் பணிப்பாளர் சபையினால்<br>• ( ½ ×4= 2 புள்ளிகள்) | • தாபனக்கோவை, நிதிப்பிரமாணம் போன்ற அரச கொள்கைக்கு ஏற்ப திணைக்களத் தலைவர்கள் |

v. சரவணன் என்பவர் அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தில் பணிபுரிந்து இளைப்பாறிய பின் கிடைத்த ஊழியர் சேமலாப நிதியின் ஒரு பகுதியினை மூலதனமாக இட்டு அச்சகம் ஒன்றினை ஆரம்பிக்க எண்ணுகின்றார். சரவணனின் அரசசேவையுடன் ஒப்பிட்டு தற்போது ஆரம்பிக்க இருக்கும் முயற்சியாண்மையினூடாக சரவணனுக்கு கிடைக்கும் நன்மைகள் நான்கினை விளக்குக.



1. முயற்சியாண்மை ஒன்றை ஆரம்பிப்பதன் மூலம் சுதந்திரமாக இயங்க முடியும். ஆனால் அரச சேவையில் சுதந்திரத் தன்மையில்லை.
2. முயற்சியாண்மை மூலம் கிடைக்கும் இலாபத்தை தனி ஒருவரே அனுபவிக்க முடியும். அரச சேவை மூலம் வரையறுத்த சம்பளத்தை மட்டுமே பெற முடியும்.
3. முயற்சியாண்மை மூலம் பல்வேறு ஆற்றல்களை வெளிப்படுத்தமுடியும். அரச சேவையில் பல்வேறு ஆற்றல்களை பயன்படுத்த முடியாது.
4. முயற்சியாண்மையில் மாற்றங்களை ஏற்படுத்தமுடியும். அரச சேவையில் மாற்றங்களை உட்படுத்துவது கடினம்.
5. முயற்சியாண்மையில் தனியாக முடிவெடுத்து செயற்படலாம். அரச சேவையில் அவ்வாறு செயற்பட முடியாது.
6. சமூக ரீதியாக ஏற்றுக்கொள்ளும் தன்மை, உளத்திருப்தி என்பன முயற்சியாண்மை மூலம் ஏற்படும். அரச சேவையில் அவ்வாறில்லை.


(மேற்கூறியவாறு பூரணமாக விளக்கமளிக்கப்பட்ட விடைக்கு 04 புள்ளிகள்)

வினா இல 03

(அ) முயற்சியாண்மையின் பொதுவான பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

(அ) இடர்களை ஏற்பதற்கான விருப்பம் **(Willingness to take risk)**
ஆக்கரீதியானது என **(Creativity)**
அர்ப்பணிப்பு **(Commitment)**
தன்னம்பிக்கை **(Selfconfidence)**
சுயாதீனமானது **(Self-reliant)**

( ½ ×4= 2 புள்ளிகள்)



**(ஆ) முயற்சியாண்மைத் திறன்களையும், பண்புகளையும் விருத்தி செய்து கொள்வதற்கான முறைகள் நான்கு தருக.**

(ஆ) சுயமதிப்பீடு

பயிற்சி

கல்வி

அனுபவங்களின் மூலம் பலனைப் பெற்றுக் கொள்ளல்.

( ½ ×4= 2 புள்ளிகள்)

**ii.** சிற்றளவு வணிகங்களின் அபிவிருத்தியை முன்னேற்றுவதற்கு பெரும்பாலான நாடுகளில் அரசாங்கங்கள் மிகவும் அக்கறையுடையனவாகக் காணப்படுகின்றன. இலங்கைப் பொருளாதாரத்தை கருத்தில் கொண்டு இதற்கான காரணங்களை விளக்குக.

1. சிற்றளவு வணிகம் ஊழியச் செறிவுடையதால் வேலைவாய்ப்பினை உருவாக்கும்
2. பிரதேச வளங்களை பயன்படுத்துவதால் பிரதேச அபிவிருத்தி ஏற்படும்
3. பிரதேச அபிவிருத்தி காரணமாக நகர்ப்புறம் நோக்கிச் செல்லும் மக்களின் அளவு குறையும்
4. குறைந்தளவு மூலதனத்துடன் வியாபாரத்தை இலகுவாக ஆரம்பிக்கலாம்
5. வருமான சமமின்மை குறைவடையும்
6. சிற்றளவு வணிகங்கள் மூலம் சிறந்த முயற்சியாளர்கள் உருவாக்கப்படுவர்.
7. பாரியளவு வணிகங்களுக்குத் தேவையான சேவைகளையும், வளங்களையும் வழங்குதல்
8. சந்தையில் காணப்படும் இடைவெளியை நிரப்புதல் **(Niche Market)**

(மேற்கூறிய விடயங்களை உள்ளடக்கிய பூரணமான விளக்கத்திற்கு 04 புள்ளிகள்)

iii. (அ) ரதன் இரசாயனமற்ற முறையில் மரக்கறி வகைகளை உற்பத்தி செய்யும் இளம் விவசாயி ஆவார். இவரின் விவசாயப் பொருட்களுக்கு அதிக கேள்வி காணப்பட்டதன் காரணத்ததால் தனது மரக்கறிகளை சந்தைப்படுத்துவதற்கு வசதியாக சிறியரக மோட்டார் வாகனமொன்றை கொள்வனவு செய்யத் தீர்மானிக்கின்றார். இவரது நண்பன் ஹரி உடன்காசுக்கு கொள்வனவு செய்வதைவிட குத்தகைக்கு பெறுவது சிறப்பானது என்ற கருத்தை வழங்குகின்றார். ஹரி அக்கருத்தை வழங்குவதற்கான காரணங்கள் நான்கு தருக.

(அ) குத்தகைக்கு பெறுவதன் மூலம் வணிகருக்குக் கிடைக்கும் பயன்கள்:

1. பாரிய பெறுமானம் கொண்ட சொத்துக்களை முழுத்தொகையையும் செலுத்தாது பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கப் பெறல்.
2. குத்தகைக்காகச் செலுத்தப்படும் வாடகையானது வருமான வரியிலிருந்து விலக்களிக்கபட்டிருத்தல்.
3. இயந்திரம் காலம் கடந்தவையாக மாறும் பொழுது ஏற்படுகின்ற நட்டத்தையும் மூலதன நட்டங்களையும் தவிர்த்து கொள்ளல்.
4. பாரியளவு தொகையை முதலீடு செய்யாது கூடிய வருமானத்தை ஈட்ட முடிதல்.

( ½ ×4= 2 புள்ளிகள்)

(ஆ)மத்திய வங்கியின் பிரதிநிதித்துவத் தொழிற்பாடுகள் நான்கினைக் குறிப்பிடுக.

(ஆ) மத்திய வங்கியின் பிரதிநிதித்துவத் தொழிற்பாடுகள்:

1. அரசின் கடன் முகாமைத்துவம்
2. வெளிநாட்டு நாணயக் கட்டுப்பாடு
3. சிறியளவிலான நிதியீட்டல் வேலைத்திட்டங்களுக்கு கிராமியக்கடன் முன்மொழிவு முறைகள் தொடர்பில் தலைமை நிறுவனமொன்றாகத் தொழிற்படல்.
4. ஊழியர் சேமலாப நிதியினை முகாமை செய்தல்.

iv) அ) தற்காலத்தில் வங்கித்துறையானது போட்டியை எதிர்கொண்டு குறிப்பிட்ட கைத்தொழில் துறையில் நீடித்து நிலைத்து நிற்பதற்காக பல்வேறுபட்ட சேவைகளை வாடிக்கையாளருக்கு வழங்குகின்றது. அந்தவகையில் வைப்புக்களை ஏற்றல், கடன் வழங்கல் என்பவற்றிற்கு மேலதிகமாக வழங்கப்படும் சேவைகள் நான்கினைக் குறிப்பிடுக.

(அ)
1. பிரதிகர்த்தா சேவை
2. குத்தகைச்சேவை
3. இலத்திரனியல் வங்கிச்சேவை
4. அடகுச் சேவை
5. பாதுகாப்பு பெட்டக வசதிகள்
6. வெளிநாட்டுச் செலாவணிக் (நாணயக்) கொள்வனவு விற்பனைக் கருமங்களில் ஈடுபடல்.
7. கடனட்டைச் சேவை
8. நிலையியற் கட்டளைப் பெறுவனவு நடவடிக்கைகள்
9. பயணிகள் காசோலைகள் வழங்குதல்
10. தன்னியக்கச் வங்கிச்சேவை வழங்குதல்
11. நாணயக் கடிதங்களை வழங்குதல்
12. ஏனைய பொருத்தமான சேவைகள் ( ½ ×4= 2 புள்ளிகள்)

(ஆ) வணிகங்களின் வெற்றிக்கு மத்தியவங்கியினால் வழங்கப்படும் நிதி உட்கட்டமைப்பு வசதிகள் மூலம் வணிகர்கள் பெற்றுக்கொள்ளும் நன்மைகள் இரண்டு தருக.

(ஆ)
1. வணிகங்கள் முதலீடு செய்தல் தொடர்பில் பாதுகாப்பு உருவாகும்
2. பணக்கொடுக்கல் வாங்கல்கள் இலகுவாக அமையும்.
3. கொடுக்கல் வாங்கல்களை வினைத்திறனாக மேற்கொள்ள முடியும்.

( 1 ×2= 2 புள்ளிகள்)

**v. (அ) காசோலைகள் குறுக்கு கோடிடலின் முக்கியத்துவம் இரண்டு தருக.**

(அ) காசோலையில் கோடிடலின் முக்கியத்துவம்

1. காசோலைக்கு மேலதிக பாதுகாப்பினை வழங்குதல்.
2. காசோலையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி, பெறுவோருக்கு கிடைக்கப் பெறுவதை உறுதிப்படுத்தல்.
3. வங்கிக் கரும பீடத்திலிருந்து பணம் எடுப்பதைத் தடுத்தல்.

( 1 ×2= 2 புள்ளிகள்)



(ஆ) கடனட்டை ஒன்றின் முன்பக்கத்தில் காணப்படும் விடயங்கள் நான்கு தருக.

(ஆ) வழங்கும் நிறுவனத்தின் பெயரும், குறியீடும்

அட்டை வகை உதாரணம்: **(Debit Card, Credit Card, ATM Card)**

அட்டை இலக்கம்

குறியீட்டு வகை **(Brand Lodge)** உதாரணம்: **Visa Master**

காலாவதியாகும் திகதி

அட்டை உரிமையாளர் பெயர் ( ½ ×4= 2 புள்ளிகள்)



வினா இல 04

**i.** கமலன் என்பவர் உள்ளூர் பழவகைகளைக்கொண்டு தயாரிக்கும் பழப்பாகு உற்பத்தி தொழிற்சாலையொன்றை களனி கங்கைக்கு அருகில் நடாத்தி வருகின்றார். தனது உற்பத்திப் பொருட்களை தனக்கே உரித்தான இரண்டு குளிரூட்டி பொருத்தப்பட்ட வாகனங்கள் மூலம் சில்லறை வியாபாரிகளுக்கு விநியோகித்து வருகின்றார். கமலனின் வணிகம் எதிர்நோக்கக்கூடிய நான்கு இடர்களையும், அவற்றிற்கு எதிராக பெற்றுக்கொள்ளக் கூடிய நான்கு காப்புறுதி ஒப்பந்த வகைகளையும் குறிப்பிடுக.

| எதிர்நோக்கக் கூடிய இடர்கள் | பெறக் கூடிய ஒப்பந்த வகைகள் |
|---|---|
| 1. ஆயுள் | ➢ ஆயுட் காப்புறுதி |
| 2. ஊழியர் | ➢ ஊழியர் பொறுப்புக் காப்புறுதி |
| 3. பழப்பாகு உற்பத்தி | ➢ உற்பத்திப்பொருள் காப்புறுதி |
| 4. தொழிற்சாலை | ➢ தீ அபாயக் காப்புறுதி |
| 5. மோட்டார் விபத்து | ➢ மோட்டார் வாகனக் காப்புறுதி |
| 6. களனி கங்கைக்கு அருகிலிருத்தல் | ➢ இயற்கை அனர்த்தக் காப்புறுதி |

i.


( ½ ×4= 2 புள்ளிகள்) ( ½ ×4= 2 புள்ளிகள்)

**ii.** (அ) வணிகத் தொடர்பாடல் முறைகளின் தற்போதைய போக்குகள் அதாவது நவீன தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் நான்கின் பெயர்களைத் தருக.

**(அ)**

1. **வேறுபட்ட கம்பியில்லா தொடர்பாடல் வலையமைப்பு (wireless connection) முறைகள் காணப்படல் (WIFI, GPRS, WiMAX, Bluetooth, etc.)**
2. **5G Mobile Internet**
3. **Cloud services**
4. **ஒளி மூலமான தொடர்பாடல் (Visible Light Communication)**
5. **4K Image Format**
6. **Augmented and Virtual Reality**
7. **The promotion of BYOD strategy**
8. **WebRTC**
9. **Social Intranets**
10. **Artificial Intelligence (AI)**


( ½ ×4= 2 புள்ளிகள்)




(ஆ) போக்குவரத்தானது வியாபாரத்தின் பரம்பலுக்கும், தனிநபர்கள் பரவலாக்கப்படுவதற்கும் காரணமாக அமைகின்றது. போக்குவரத்தானது வணிகருக்கு முக்கியத்துவம் பெறும் முறைகள் நான்கினைக் குறிப்பிடுக.

(ஆ) போக்குவரத்து வணிகருக்கு முக்கியத்துவம் பெறும் முறை:

1. மூலப்பொருள்களை உரிய நேரத்திற்குப் பெற்றுக் கொள்ள முடிதல்.
2. முடிவுப் பொருள்களை உரிய நேரத்திற்கு சந்தைப்படுத்த முடிதல்.
3. ஊழியர்களைக் குறிப்பிட்ட நேரத்தில் அழைத்துக் கொள்ள முடிதல்.
4. வணிகத் தொடர்புகளைப் பேண முடிதல்.
5. சந்தையை விரிவுபடுத்த முடிதல். ( ½ ×4= 2 புள்ளிகள்)



**iii. (அ) கொழும்பு நகரில் பிரபல்யமான மரத்தளபாடங்களை விற்பனை செய்யும் வணிகமொன்று தனது மரத்தளபாடங்களை விற்பனை செய்யும் வரையில் களஞ்சியப்படுத்துவதற்கு களஞ்சியசாலை ஒன்றினை வாடகைக்கு பெற விரும்புகின்றது. குறித்த மரத்தளபாட விற்பனையகம் களஞ்சியசாலையை தெரிவு செய்யும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய செலவுகள் நான்கினைக் குறிப்பிடுக.**

(அ) 1. போக்குவரத்துக் கட்டணம் ( முடிவுப் பொருட்களை நுகர்வோருக்கு விநியோகிக்கும் வரையில்)
2. ஏற்றியிறக்கல் கட்டணம்
3. களஞ்சிய வாடகை (Rent)
4. பிணை வைப்பு (Security Deposit)
5. காப்புறுதிக் கட்டணம் (Insurance rate)
6. வாகனத் தரிப்பிடத்திற்கான செலவுகள் (Packing location rated Expenses)



(ஆ) போக்குவரத்து மற்றும் அமையவியல் சேவையின் முக்கியத்துவம் நான்கு தருக.

(ஆ) போக்குவரத்து மற்றும் அமையவியல் சேவையின் முக்கியத்துவம்

1. சரியான உற்பத்தி, சரியான அளவு, சரியான நேரம், சரியான இடம், சரியான விலையில் நல்ல நிலைமையில் சரியான நுகர்வோருக்கு விநியோகிப்பதற்கு
2. சரக்கிருப்புக் கட்டுப்பாடு, உற்பத்தித் திட்டமிடல், பொருள் கொள்வனவு, போக்குவரத்து, களஞ்சியபப்டுத்தல் போன்ற கருமங்களை முறையாக மேற் கொள்வதற்கு
3. சகல இயந்திரங்களுக்கும் அனைத்து வேலை மத்திய நிலையங்களுக்கும் தேவையான பொருள்கள் தேவையான அளவில் தேவையான தரத்துடன் உரிய நேரத்தில் கிடைக்கப் பெறுகின்றதா என்பதை உறுதிப்படுத்துவதற்கு
4. சந்தை ஆய்வு, தேவைகளைத் திட்டமிடல், உற்பத்தி செய்வதா கொள்வனவு செய்வதா **(Make - or - buy)** என்பதைத் தீரமானித்தல் என்பவற்றின் மூலம் கிரயத்தை இழிவுபடுத்திக் கொள்வதற்கும் திட்டச் சங்கிலியினைத் தொடர்ச்சியாகப் பேணிச் செல்வதற்கும் ( ½ ×4= 2



iv. (அ) ‘நாடொன்று வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபடுவதன் மூலம் பொருளாதார ரீதியான சிக்கனங்களை பெற்றுக்கொள்ள முடியும்’ இக்கூற்றினை விளக்குக.

(அ) வெளிநாட்டு வியாபாரம் காரணமாக உள்நாட்டுச் சந்தைக்கு மாத்திரமன்றி உலகலாவிய சந்தைக்கும் உற்பத்திகள் மேற்கொள்ளப்படுவதனால் பாரியளவு உற்பத்தி இடம்பெறுகின்றது. இதனால் அலகுக்கான கிரயம் குறைவடைந்து பொருளாதார ரீதியான சிக்கனங்களை ஏற்படுத்திக் கொள்ளமுடியும். (2 புள்ளிகள்)

(ஆ)வெளிநாட்டு வியாபாரத்திற்கு எதிரான தீர்வைகள், செலாவாணி கட்டுப்பாட்டு சட்டதிட்டங்கள், சுங்க சட்டதிட்டங்கள் போன்ற பல்வேறு தடைகளை குறைப்பதற்காக உருவாக்கப்பட்டிருக்கும் சர்வதேச அமைப்புக்கள் நான்கின் பெயர்களைத் தருக.

(ஆ) 1. உலக வியாபார அமைப்பு (**WTO**)
2. சார்க் அமைப்பு (**SAARC**)
3. ஆசிய அபிவிருத்தி வங்கி (**ADB**)
4. உலக வங்கி (**IBRD**)
5. சர்வதேச நாணய நிதியம் (**IMF**)
6. வேறு பொருத்தமான சர்வதேச அமைப்புக்கள்

( ½ ×4= 2 புள்ளிகள்)

**v.** ஒரு நாட்டின் நிறுவனம் அல்லது நபர் வேறொரு நாட்டின் நிதிச்சொத்துக்களை கொள்வனவு செய்தல், அல்லது புதிய தொழில்முயற்சியை ஆரம்பித்தல் அல்லது ஏற்கனவே இயங்கும் தொழில்முயற்சிகளின் பங்குகளை கொள்வனவு செய்தல் வெளிநாட்டு முதலீடு எனப்படும். வெளிநாட்டு முதலீட்டு உள்வருகையின் சாதக, பாதக தாக்கங்கள் தொடர்பாக விமர்சிக்குக.

- வெளிநாட்டு முதலீடு உள்வருகையின் சாதகங்களும் பாதகங்களும்

| சாதகங்கள் | பாதகங்கள் |
|---|---|
| 1. அந்நியச் செலாவணி நாட்டுக்குள் வரும்<br>2. கடன் சுமை குறைவடையும்<br>3. புதிய தொழில்நுட்ப பரிமாற்றம் இடம்பெறும்<br>4. மூலதன உட்பாய்ச்சல் இடம்பெறும்<br>5. புதிய முகாமைத்துவ நுட்பங்கள் உட்பாய்ச்சப்படும்<br>6. சென்மதி நிலுவைப் பிரச்சினைக்கு தீர்வாக அமையும்<br><br>(மேற்கூறிய சாதக, பாதகங்களை உள்ளடக்கிய விமர்சன ரீதியான விடைக்கு 04 புள்ளிகள்) | 1. இலாபமாகவும், வட்டி வருமானமாகவும் பெருந்தொகை நிதி வெளியேறும்<br>2. மூலதனச் செறிவுடைய தொழில்நுட்ப பயன்பாட்டால் வேலைவாய்ப்புக்கள் இழக்கப்படலாம்.<br>3. இயற்கை வளங்கள் மிகை பயன்பாட்டிற்குட்படலாம்.<br>4. அரசாங்கத்தின் வரிவருமானங்கள் முறையாக கிடைக்காமல் போகலாம்<br>5. உள்நாட்டு முதலீட்டாளர்களின் பயன்பாட்டிற்கான பணம் வெளிநாட்டு முதலீட்டாளர்களால் பயன்படுத்தப்படலாம்.<br>6. திறமையான பணியாளர்கள் உள்நாட்டு நிறுவனங்களிலிருந்து வெளிநாட்டு நிறுவனங்களை நோக்கி செல்வதால் உள்நாட்டு கைத்தொழில்கள் பாதிக்கப்படலாம் |

வினா இல 05

i. நிறுவனமொன்றில் முகாமையாளர்கள் பல்வேறுமட்டங்களில் காணப்படுகின்றனர். அதிகாரத்திற்கேற்ப முகாமையாளர்களின் வகைகளை குறிப்பிடுவதுடன், ஒவ்வொரு மட்ட முகாமையாளரும் மேற்கொள்ளும் கருமங்கள் இவ்விரண்டு தருக.

1. உயர்மட்ட முகாமையாளர்கள் / மேல்மட்ட முகாமையாளர்
2. நடுத்தர (இடைநிலை) மட்ட முகாமையாளர்கள்
3. கீழ்மட்ட முகாமையாளர்கள் / முதல் வரிசை முகாமையாளர் (மூன்றுக்கும் 01 புள்ளி)

➢ உயர்மட்ட முகாமையாளர்கள் / மேல்மட்ட முகாமையாளர்

1. அமைப்பொன்றின் நோக்கங்களை உருவாக்குதல்.
2. உபாய வழிமுறைகளையும் கொள்கைகளையும் தீர்மானித்தல்.
3. நிறுவனத்தின் முழுமையான செயன்முறைகளைக் கண்காணித்தல்.
4. இடைநிலைமட்ட முகாமையாளர்களின் கருமங்களை மேற்பார்வை செய்தல்.( ½ ×2= 1புள்ளி)

➢ நடுத்தர (இடைநிலை) மட்ட முகாமையாளர்கள்

1. உயர்மட்ட மற்றும் கீழ்மட்ட முகாமையாளர்களுக்கிடையில் இணைப்புக் கருமஙக்ளை மேற்கொள்ளல்.
2. உயர்மட்ட முகாமையாளர்களினால் விருத்தி செய்யப்படுகின்ற திட்டங்கள், உபாயங்கள், கொள்கைகள் என்பவற்றை நடைமுறைப்படுத்துதல்.
3. உயர்மட்ட முகாமைத்துவத்திற்கு தீர்மானமெடுப்பதற்கு தேவையான தகவலக்ளை வழஙகல்
4. கீழ்மட்ட முகாமையாளர்களின் கருமங்களை மேற்பார்வை செய்தலும் கட்டுப்படுத்தலும்.

( ½ ×2= 1 புள்ளி)

➢ கீழ்மட்ட முகாமையாளர்கள்

1. உயர் நடுத்தர மட்டமுகாமையாளர்களின் திட்டங்கள், கட்டளைகளை நடைமுறைப்படுத்துதல்
2. முகாமைத்துவமல்லாத ஊழியர்களின் கருமங்களை மேற்பார்வை செய்தலும் கட்டுப்படுத்தலும்.

( ½ ×2= 1 புள்ளி)

**ii.** காயத்திரி மென்பான உற்பத்தி நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்கள் தாம் நிறைவேற்றுகின்ற வேலைகளின் அளவு அதிகம் என்பதனால் சம்பளத்தை அதிகரித்துத் தருமாறு ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே வேண்டுகோளொன்றை முன்வைத்து வருகின்றனர். நிறுவன முகாமை இது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தாதமையினால் அப்பிரச்சினையானது வேலைநிறுத்தம் வரை சென்றுள்ளது.

(அ)மேற்படி பிரச்சினைக்கு இரண்டு மாற்றுவழிகளை முன்வைக்க.

(அ) 1. சம்பளத்தை அவர்கள் கோரும் அளவிற்கு அதிகரித்தல்
2. புதிதாக ஊழியர்களை இணைத்துக் கொள்ளல்
3. வேறு பொருத்தமான விடைகள் ( 1 ×2= 2 புள்ளிகள்)

(ஆ) இரண்டு மாற்றுவழிகளில் சிறந்ததொன்றை தெரிவு செய்ய நிறுவனம் கூடுதல்
கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(ஆ) 1. ஏற்றுக்கொள்ளக் கூடிய தன்மை
2. செயற்பாட்டினை நடைமுறைப்படுத்தக் கூடிய இயலுமை
3. சட்ட ரீதியான தன்மை
4. நிறுவன ஒழுக்க விழுமியம், நிறுவனக் கலாசாரம்

( ½ ×4= 2 புள்ளிகள்)

**iii.** அ) நீர் சிறந்த தலைவரெனக் கருதும் ஒரு நபரைத் தெரிவு செய்து அவரிடன் காணப்படும் தலைமைத்துவப் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

(அ) தலைமைத்துவப் பண்புகள்

வசீகரத் தன்மை

உயர் ஆளுமைப்பண்பு | புத்திக்கூர்மை

தன்னம்பிக்கை | உடல், உள ரீதியான தேகாரோக்கியம்

சுய ஒழுகக்ம் | உறுதிபூணல்


அர்ப்பணிப்பு | ( ½ ×4= 2 புள்ளிகள்



(ஆ) முறையான தொடர்பாடல், முறையற்ற தொடர்பாடல் இரண்டினையும் வேறுபடுத்துக.

(ஆ) முறையான தொடர்பாடல் என்பது சட்டரீதியான அமைப்பு முறைமையில் பாய்ந்து செல்கின்ற தெளிவான நிலையிலும் அறிக்கை ரீதியாகவும் இடம்பெறுகின்ற, ஏற்றுக் கொள்ளப்பட்ட செய்திப் பரிமாற்ற முறையாகும். அதாவது மேலிருந்து கீழாகவும் கீழிருந்து மேலாகவும் கிடையாகவும் பாய்ந்து செல்கின்ற முறையான திட்டமிடப்பட்ட தொடர்பாடலாகும்.

அமைப்பு முறைக்கு வெளியாக சட்டரீதியாக ஏற்றுக் கொள்ளப்படாத தெளிவற்ற நிலையில் தகவல்கள் பாய்ந்து செல்வதினூடாக இடம்பெறுகின்ற தொடர்பாடல் முறையற்ற தொடர்பாடல் எனப்படும். அல்லது முறையான தொடர்பாடலுக்கு மேலதிகமான தகவல்கள் பரிமாற்றப்படல் முறையற்ற தொடர்பாடலாகும். (2 புள்ளிகள்)



iv. (அ) கட்டுப்பாட்டுச் செயல்முறையின் படிமுறைகளைக் குறிப்பிடுக.

(அ) 1. நியமங்களை நிறுவுதல்.
2. செயற்பாட்டு விளைவுகளை அளத்தல்
3. மாறல்களை இனங்காணல்
4. திருத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்

( ½ ×4= 2 புள்ளிகள்)

(ஆ) முன்னூட்டல் கட்டுப்பாடு என்றால் என்ன? உதாரணம் தருக.

(ஆ) நிறுவனமொன்றில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் உருவாதல் மற்றும் அதன் மூலம் எதிர்காலத்தில் செயல் அடைவில் ஏற்படக்கூடிய இழப்பினைத் தவிர்ப்பதற்காக எடுக்கப்படுகின்ற கட்டுப்பாடு முன்னூட்டல் கட்டுப்பாடு எனப்படும்.

(01 புள்ளி)

உதாரணம்: இயந்திரங்களைச் சரியாகப் பராமரித்தலும் செயற்படுத்துவதற்கு முன்னர் சோதனை செய்தல்.
ஊழியர்களைப் பயிற்றுவித்தல் மூலம் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களாக மாற்றுதல். (01 புள்ளி)

**v. அ) செயற்பாட்டு முகாமைத்துவ செயல்முறையில் பொருட்கள் உற்பத்தி செய்யப்படும் முறைகள் பல காணப்படுகின்றன. வணிகர் ஒருவர் தனக்கு பொருத்தமான உற்பத்தி முறையை தெரிவு செய்யும்போது கவனத்தில்கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கினைக் குறிப்பிடுக.**

**அ) உற்பத்தி முறையொன்றைத் தெரிவு செய்யும்பொழுது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்**

1. உற்பத்திப் பொருளின் தன்மை
2. சந்தையின் அளவு
3. பயன்படுத்தப்படும் தொழில்நுட்பமும் தேவையான உபகரணங்களும்
4. ஏற்கவேண்டிய கிரயம்
5. கொள்வனவு செய்யும்போக்கு (தொடர்ச்சியானதா.ீ.இடைக்கிடையா)
6. வளங்களைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் வசதி ( ½ ×4= 2 புள்ளிகள்)



(ஆ)ஆடை உற்பத்தி நிறுவனமொன்றில் இனங்காணக்கூடிய நிலையான கிரயம், மாறும் கிரயம் என்பவற்றிற்கு இவ்விரண்டு உதாரணம் தருக.

(ஆ) நிலையான கிரயம்

கட்டட வாடகை, மின்கட்டணம், காவலாளர் சம்பளம், தொழிற்சாலை காப்புறுதி ( ½ ×2= 1 புள்ளி)

மாறும் கிரயம்

துணிகளுக்கான செலவு, நூல், பொதியிடல் செலவுகள் ( ½ ×2= 1 புள்ளி)



வினா இல 06

**i.** நவீனரக இயந்திர உபகரணங்களைப் பயன்படுத்தி சுதா என்பவர் பிஸ்கற் உற்பத்தி நிறுவனம் ஒன்றினை நடாத்தி வருகின்றார்.

(அ)மேற்படி பிஸ்கற் உற்பத்தி நிறுவனத்திற்கு தேவையான பொருட்கள் நான்கினைத் தருக.

(அ) பிஸ்கற் உற்பத்திக்கான மூலப்பொருட்கள் மூலதன உபகரணங்கள்
வெதுப்பக இயந்திரங்கள் அலுவலக உபகரணங்கள்
எழுது கருவிகள் வேறு பொருத்தமான பொருட்கள்

( 1 புள்ளி)

(ஆ) பிஸ்கற் உற்பத்தி நிறுவனத்திற்கு தேவையான சேவைகள் நான்கு தருக.

(ஆ) பாதுகாப்புச் சேவை நீர்
பராமரிப்புச் சேவை சுத்திகரிப்புச்சேவை
போக்குவரத்துச் சேவை மின்சாரம் ( 1 புள்ளி)

(இ) பிஸ்கற் உற்பத்தி நிறுவனத்திற்கு தேவையான பொருட்கள் சேவைகளை கொள்வனவு செய்யும்போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை படிமுறையாகத் தருக.

(இ)
1. பொருள் தேவைப்பாட்டினைக் கொள்வனவு செய்யும் திணைக்களத்திற்கு அறிவித்தல்.
2. வழங்குநரொருவரை இனங்காணல்.
3. கட்டளையிடல்
4. பொருளைப் பெறல்
5. பணக்கொடுப்பனவு (02 புள்ளிகள்)

**ii. (அ) இருப்புக் கட்டுப்பாட்டின் முக்கியத்துவம் நான்கு தருக.**


**(அ) இருப்புக் கட்டுப்பாட்டின் முக்கியத்துவம்**

1. உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் கருமங்களைத் தொடர்ச்சியாகப் பேணுதல்.
2. பற்றாக்குறை அல்லது மேலதிக இருப்பினைப் பேணுவதனால் ஏற்படும் செலவினை இழிவுபடுத்துதல்.
3. இயந்திராதிகள், உழைப்பு போன்ற வளங்களிலிருந்து உச்சப் பயனைப் பெற்றுக் கொள்ளல்
4. எதிர்பாராத கேள்வி நிலைமைக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்தல்.

( ½ ×4= 2 புள்ளிகள்)

(ஆ)சிறந்த இருப்பு மட்டங்களை பேணிச் செல்லும்போது கவனம் செலுத்தவேண்டிய பிரதான இருப்பு மட்டங்களை பெயரிடுக.

(ஆ) மறு கட்டளை மட்டம் (Re-order Level)
இழிவு இருப்பு மட்டம் (Minimum Stock Level)
உச்ச இருப்பு மட்டம் (Maximum Stock Level) (02 புள்ளிகள்)



iii. (அ) ஆதித்யாவின் குடும்பத்தினர் தமது வீட்டு பாவனைக்கென புதிதாக தொலைக்காட்சி ஒன்றினை கொள்வனவு செய்ய விரும்புகின்றனர். குடும்ப அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் வேறுபட்ட வியாபார பெயர்களை சிபார்சு செய்தனர். ஆதித்யா ஒரு பொருளானது தரமானது என்பதை வெளிப்படுத்த அப்பொருளில் உள்ளடக்கியுள்ள சில கூறுகளை கவனத்தில் கொண்டு குறித்த ஒரு வியாபாரப்பெயருள்ள தொலைக்காட்சியினை கொள்வனவு செய்யுமாறு வலியுறுத்தினார். ஆதித்யா கருத்தில் கொண்ட தரத்திற்கான கூறுகளைக் குறிப்பிடுக.

(அ) 1. சிறந்த செயற்பாட்டுத் தன்மை
2. நீடித்த பாவனை
3. நம்பகத்தன்மை
4. நியமங்களுக்கு ஏற்புடையதாக இருத்தல்.
5. பொருத்தப்பாடுடையது.
6. பாதுகாப்புத் தன்மை

(ஆறு குறிப்பிட 02 புள்ளிகள், 05 குறிப்பிட 1½ புள்ளி, 04 குறிப்பிட 01 புள்ளி, 03 குறிப்பிட ½)

(ஆ) தரக்கட்டுப்பாட்டு நுட்பங்கள் நான்கின் பெயர்களைத் தருக.

(ஆ) 1. தர வட்டம்
2. தரப் பாதுகாப்பு
3. பூச்சிய வழு
4. தர நியமம்
5. புள்ளிவிபர ரீதியிலான தரக்கட்டுப்பாடு ( ½ ×4= 2 புள்ளிகள்)

iv. அ) ‘ உற்பத்தியின் வினைத்திறன், விளைதிறனை அளவீடு செய்யும் முக்கிய அளவீடொன்றாக உற்பத்தித்திறன் காணப்படுகின்றது.’ வணிமொன்றிற்கு உற்பத்தித்திறன் முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள் நான்கு தருக.

(அ) உற்பத்தித் திறன் வணிகத்திற்கு முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள்.

1. வணிகத்தின் வளங்களை பகிர்ந்தளித்தல் தொடர்பாகத் தீர்மானமெடுப்பதற்கு
2. வணிகத்தை விரிவுபடுதத்ல் தொடர்பில் தீர்மானமெடுப்பதற்கு
3. ஏனைய ஒத்த நிறுவனங்களுடன் உற்பத்தித் திறனை ஒப்பீடு செய்வதற்கு
4. வணிக நிறுவனத்தின் முன்னேற்றத்தினை விளங்கிக்கொள்வதற்கு

(ஆ) உற்பத்திதிறனை விருத்தி செய்வதற்கு நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதிலுள்ள பிரச்சினைகள் நான்கினைக் குறிப்பிடுக.

(ஆ) நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதிலுள்ள பிரச்சினைகள்

1. தொழில்நுட்பம் துரிதமாக மாற்றமடைதல்.
2. பாரியளவிலான முதலீடு தேவைப்படல்.
3. சூழல் மாசடைதலின் மூலம் ஏற்படுகின்ற பிரச்சினைகள்.
4. திடீரென தொழில்நுட்பம் வீழ்ச்சியடைதல் மற்றும் வழுக்கள் ஏற்படல் காரணமாக உற்பத்தி செயற்பாடுகள் செயலிழத்தல்.
5. பயிற்சிபெற்ற ஊழியர்கள் காணப்படாமை.

v. ‘சந்தைப்படுத்தலானது மனித நேயம் கொண்டதும் சமூக ரீதியுமான செயற்பாடொன்றாகும்’ விளக்குக.

அ) சந்தைப்படுத்தலின் அடிப்படையானது சமூகம் மற்றும் தனிநபர்களின் தேவை விருப்பங்களை நிறைவேற்றுகின்றமையால் சமூகச் செயற்பாடொன்றைப் போன்று மனித நேயம் கொண்ட செயல்முறைகளையும் நிறைவேற்றிக் கொடுக்கின்றது.

(சந்தைப்படுத்தல் தொடர்பான வரைவிலக்கணங்களைக் கொண்டு இவ்வினாவிற்கு விளக்கம் கொடுக்கப்பட்டிருந்தால் 02 புள்ளி)




ஆ) இலக்குசந்தைக்கும், சந்தை துண்டமாக்கலுக்குமிடையேயுள்ள தொடர்பினை விளக்குக.

(ஆ) உற்பத்தியாளரொருவர் தனது உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்காக குறித்த பொருளின் முழுமையான சந்தையின் குறித்த நுகர்வோர் குழுவொன்றின் மீது கவனத்தைச் செலுத்துதல் அல்லது தனது உற்பத்திப் பொருட்களுக்கு நுகர்வோர் குழுவொன்றைத் தெரிவு செய்து அவர்களின் தேவை விருப்பங்களை அறிந்து பொருட்கள் சேவைகளை அறிமுகபப்டுத்துகின்ற சந்தை இலக்குச சந்தையாகும்.

முழுமையான சந்தையினை ஒரே தன்மை கொண்ட நுகர்வோர் குழுக்களை உள்ளடக்கி பகுதிகளாக பிரித்தல் சந்தைத்துண்டமாக்கலாகும்.

சந்தையை துண்டமாக்குவதன் மூலம் அதிலிருந்து பெறப்படும் சந்தையே இலக்குசந்தையாகும். சந்தை துண்டமாக்கப்படுவதன் மூலமே இலக்கு சந்தை இனங்காணப்படும். (தொடர்பு குறிக்கப்பட்டிருந்தால் மட்டும் முழுமையாக 02 புள்ளி வழங்கவும்)






**வினா இல 07**

**i. (அ) பின்வரும் எண்ணக்கருக்களை விளக்குக.**

- ❖ **பெறுமதியும் திருப்தியும் (value and satisfaction)**
- ❖ **உணர்வுகளும், பிரவேசமும் (Impression and Engagement)**

(அ) 1. **பெறுமதிகளும் திருப்தியும் (Values and Satisfaction)**

நுகர்வுத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு உற்பத்தியாளருக்குக் காணப்படும் ஆற்றல் தொடர்பாக நுகர்வோரினால் மேற்கொள்ளப்படும் முழுமையான மதிப்பீடு பெறுமதியாகும்.

நுகர்வோர் எதிர்பார்க்கும் முறையில் உற்பத்திப் பொருளொன்றை உருவாக்குதல் மூலம் நுகர்வோன் பெற்றுக்கொள்கின்ற மகிழ்ச்சியே திருப்தி எனப்படும். (01 புள்ளி)



## 2. உணர்வுகளும் பிரவேசமும் (Impressions and Engagement)

தொடர்பாடல் ஊடகங்களுள் தான் பயன்படுத்துகின்ற ஊடகமானது எந்தளவு பாடப்பரப்பினை உள்ளடக்குகின்றது என்பது தொடர்பில் வணிகரின் கோணத்தில் உணர்வுகள் எனக் கருதப்படும்.

தொடர்பாடல் ஊடகம் தொடர்பில் நுகர்வோர் எந்தளவு தூரத்திற்குக் கவனத்தைச் செலுத்துகின்றார் என்பதுடன் அவர் அதில் நேரடியாகத் தொடர்புபடுகின்றனரா என்பதே பிரவேசம் எனப்படும். (01 புள்ளி)



**iii.** (ஆ) புதிய வகை சவர்காரம் ஒன்றினை அறிமுகம் செய்யத் தீர்மானித்திருக்கும் கம்பனி ஒன்று அதன் இலக்கு சந்தையில் சந்தைப்படுத்தல் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு உற்பத்திப்பொருள் தொடர்பாக கவனம் செலுத்தும் விடயங்கள் நான்கு தருக.

(ஆ) உற்பத்திப்பொருளின் பல்லினத்தன்மை - Product differentiation [2]

தரம் - Quality
வடிவமைப்பு - Design
குணாம்சங்கள் - Features
சின்னம் - Brand
பொதி - Package
அளவு - Quantity
விற்பனையின் பின் சேவை - After Sales Services
உத்தரவாதம் - Warranty
ஆக்கம் - Creative






**ii. ‘பொதியிடலொன்றின் மூலம் எதிர்பார்க்கின்ற அடிப்படைத் தொழிற்பாடு பொருளின் பாதுகாப்பாகும்’ ஆயினும் தற்போது பொதியிடலானது சந்தைப்படுத்தல் கருவியொன்றாகவும் தொழிற்படுகின்றது. பொதியிடலானது சந்தைப்படுத்தல் கருவியொன்றாக தொழிற்படும் முறையை விளக்குக.**

❖ பொதியிடலானது சந்தைப்படுத்தல் கருவியொன்றாக செயற்படும் முறையினை பின்வரும் விடயங்களின் அடிப்படையில் விபரித்தல் அவசியமானதாகும்.

1. கவர்சிகரமான தன்மையைக் கொண்டிருத்தல்
2. தகவல்களை வழங்குதல்
3. பெறுமதியொன்று சேர்க்கப்படல்
4. வேறு பயன்பாட்டிற்கு பயன்படுத்தக் கூடியதாகவிருத்தல்
5. பரிமாற்றம் செய்வதில் இலகுதன்மை கொண்டிருத்தல்
6. காட்சிப்படுத்தல் இலகுவாக இருத்தல்

(மேற்காட்டியவாறு எந்தவொரு நான்கு விடயங்களை விபரிப்பதற்கு 04 புள்ளிகள்)

## TO PRESERVE



- Foods are packaged to prevent them from going rotten.
- It also keeps them hygienic and allows them to be bought conveniently.

## TO PROTECT



- The packaging protects the contents, allowing the contents to arrive at the shop or at home undamaged.

## TO INFORM






- Labels provide information about the product to the customer or shop.
- They can be used as a marketing tool.
- They can make claims to a customer.
- They can carry information for shops in barcodes.

## TO TRANSPORT





- Items are packed into boxes or trays called 'Outers' so that they can be moved, and stacked easily.
- Packaging usually tessellates to allow more to be transported in a smaller lorry, reducing costs.

**iii.** பீற்றரும், சலீமும் க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான கல்விச் சஞ்சிகையொன்றினை மாதாந்தம் வெளியிட்டு சந்தைக்கு முன்வைக்க எண்ணியுள்ளனர். இச்சஞ்சிகை தொடர்பாக வாடிக்கையாளரை அறியச் செய்வதற்கு விளம்பர வேலைத்திட்டமொன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர்.

(அ) இவ்விளம்பர வேலைத்திட்டத்தை முன்வைப்பதற்கான அடிப்படை நோக்கங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(அ) 1. அறிவுறுத்துதல்

2. கொள்வனவு செய்யத் தூண்டுதல் ( 1 ×2= 2 புள்ளிகள்)

(ஆ)

**a)** இவ்விளம்பர வேலைத்திட்டத்திற்கு பயன்படுத்தக் கூடிய இரு ஊடகங்களைக் குறிப்பிடுக.

(ஆ) பத்திரிகை, தொலைக்காட்சி

(இவற்றை விட தற்காலத்திற்கு பொருத்தமான ஊடகங்கள் குறிப்பிட்டிருந்தாலும் புள்ளி வழங்கவும்) ( ½ ×2= 1 புள்ளி)

**b)** அவ்விரு ஊடகங்களையும் தெரிவு செய்யக் காரணமாக அமைந்த காரணிகளைக் குறிப்பிடுக.

காரணங்கள்

பத்திரிக்கை:- அதிகமான வாடிக்கையாளருக்கு ஒரே நேரத்தில் தகவல்களை வழங்க முடிதல்

தொலைக்காட்சி:- கட்புல, செவிப்புல சாதனமொன்றாக முன்வைக்க முடிதல்

( ½ ×2= 1 புள்ளி)



NEW DELHI LATE CITY, 30 PAGES, ₹ 5.00

# The Indian EXPRESS

JOURNALISM OF COURAGE

FRIDAY, JULY 29, 2016

WWW.INDIANEXPRESS.COM

CITY P3 HER SCHOOL FEE NOT PAID, GIRL ENDS LIFE
AAP MLA GETS BAIL, WARNED NOT TO THREATEN COMPLAINANT

THE EDITORIAL PAGE P14 Law against children By Harsh Mander
THE IDEAS PAGE: An activist life in fiction By G N Devy, P15

WORLD OBAMA HAILS HILLARY AS POLITICAL HEIR P17

SPORT NARSINGH HEARING ENDS, VERDICT SOON P25

J&K CM SPEAKS ON JULY 8 ENCOUNTER, DEATHS DURING PROTESTS

## Sacrifice of children won't go waste: Mehbooba

'Had securitymen known Burhan was one of three at spot, there was a chance'

BASHAARAT MASOOD

Chief Minister Mehbooba Mufti in Srinagar, Thursday.

## In rift with Krishi Bhawan, dairy board chief quits

HARISH DAMODARAN

## Jaitley reaches out to Oppn on GST, Congress signals all-clear next week

MANOJ CG

Rahul swipe over dal prices: Arhar Modi, Arhar Modi

EXPRESS NEWS SERVICE

Prime Minister Narendra Modi arrives at Parliament House on Thursday.

## Dalit couple killed in UP over Rs 15

ISHITA MISHRA

## Mamata hands 30 letters to PM at Delhi meeting

BUSINESS AS USUAL By UNNY

Cutting-edge technology

## At Ground Zero of topper... 844 students on paper, 2 i...

SANTOSH SINGH


SCHOOLS OF SCANDAL
AN EXPRESS INVESTIGATION PART II
TOMORROW: Ghost schools of Bhojpur

MUZAFFARPUR
Only 1 classroom

## Mahasweta Devi, voice of s...

PREMANKUR BISWAS

MAHASWETA DEVI 1926-2016






iv. (அ) ‘முதலீடொன்றை மேற்கொள்ளும்போது சரியான தீர்மானமெடுப்பது வணிகத்தின் வெற்றிக்கு வழிகாட்டுகின்றது.’ இக்கூற்றினை விளக்குக.

(அ) முதலீடொன்றை மேற்கொள்ளும் போது சரியான தீர்மானமெடுப்பதன் மூலம் பின்வரும் நன்மைகளைப் பெற முடியும்.

1. வணிகத்தின் வளங்களில் இருந்து உச்ச பயனைப் பெறல்
2. மாற்று முதலீட்டுச் சந்தர்ப்பங்களை இனங்காணக் கூடியதாகவிருந்தல்
3. கூடிய அனுகூலங்களுடன் கூடிய முதலீட்டினை தெரிவு செய்ய முடிதல்

(மேற் கூறிய விடயங்களுடன் கூடிய விளக்கத்திற்கு 02 புள்ளிகள்)

(ஆ)வரையறுத்த காயா கம்பனியின் நிதிமுகாமையானது மேலதிக நிதியீட்டத்திற்காக பங்குகளை பொது மக்களுக்கு வெளியிட்டு நிதியைத் திரட்டுவதா? அல்லது நிறுத்தி வைத்த இலாபத்தை பயன்படுத்துவதா? என்பது தொடர்பான தீர்மானம் எடுக்க வேண்டிய தேவையிலுள்ளனர். பங்குகளை வெளியிட்டு நிதியைத் திரட்டுவதில் காணப்படும் அனுகூலங்கள் இரண்டினையும், நிறுத்தி வைத்த இலாபத்தை பயன்படுத்துவதிலுள்ள பிரதிகூலங்கள் இரண்டினையும் குறிப்பிடுக.

(ஆ) பங்குகளை வெளியிட்டு நிதி திரட்டுவதில் காணப்படும் அனுகூலங்கள்

1. பாரிய நிதிப் பெறுமானமொன்றைப் பெற்றுக்கொள்ள முடிதல்.
2. வணிகத்தின் உரிமைத்துவத்தை விரிவாக்க முடிதல். ( ½ ×2= 1 புள்ளி)

நிறுத்தி வைத்த இலாபத்தை பயன்படுத்துவதில் காணப்படும் பிரதிகூலங்கள்

1. பாரிய நிதித் தொகையினைப் பெற முடியாதிருத்தல்.
2. தொழிற்படு மூலதனப் பிரச்சினை ஏற்படல். ( ½ ×2= 1 புள்ளி)

v. (அ) 'நிதி மேலதிகமாகவுள்ள அலகினையும், நிதி குறைபாடுடைய அலகினையும் தொடர்புபடுத்தும் பொறிமுறையே நிதி முறைமையாகும்'. பொருளாதாரமொன்றில் நிதித்தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நிதிமுறைமைகள் நான்கினைக் குறிப்பிடுக.

நிதிச் சந்தை

நிதி நிறுவனங்கள்

நிதிக் கருவிகள்

நிதி உட்கட்டமைப்பு வசதிகள்

மத்திய வங்கி

(ஆ) வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனி கொழும்பு பரிமாற்றகத்தில் பதிவு செய்யக் கூடிய முறைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.

(அ) வரையறுக்கப்பட்ட பொதுக்கமப்னிகள் கொழும்புப் பங்கு பரிமாற்றகத்தில் பதிவு செய்யக்கூடிய முறைகள்

ஆரம்ப பொது வழங்கல் **(Initial public offer)**

கம்பனியொன்று முதல் தடவையாகப் பங்குகளை வழங்குவதன் மூலம் பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்துப் பங்குச் சந்தையில் பட்டியற்படுத்துதல்.

விற்பனைக்கான கொடை முனைவு **(offer for sale)**

தற்போது பங்குகளை வழங்கியுள்ள கம்பனியொன்று பொதுமக்களிடம் காணப்படும் பங்குகளை சந்தையினூடாக விற்பனைக்கு முன்வைப்பதற்காகப் பட்டியற்படுத்துதல்.

அறிமுகப்படுத்தல் **(Introduction)**

பொதுமக்களுக்குப் பங்குகளை வழங்காது அறிமுகப்படுத்தும் சந்தர்ப்பத்தின்போதே கொழும்புப் பங்குப் பரிமாற்றகத்தினூடாகப் பங்குகளை வழங்கல்.

(ஏதாவது இரண்டினை குறிப்பிட 01 புள்ளி, இரண்டினை விளக்க 01 புள்ளி)

வினா இல 08

i. (அ) காசுப் பாதீட்டு அட்டவணை என்பதனால் கருதப்படுவது யாது?

(அ) காசுப் பாதீட்டு அட்டவணை குறித்த எதிர்கால நிதியாண்டொன்றின் காசுப் பெறுவனவுகளையும் காசுக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கியதாகத் தயாரிக்கப்படுகின்ற அட்டவணை காசுப்பாதீட்டு அட்டவணை எனப்படும்.

(02 புள்ளி)

(ஆ) காசுப்பாதீட்டு அட்டவணையைத் தயாரிப்பதன் மூலம் கிடைக்கும் பயன்கள் நான்கு தருக.

(ஆ) காசுப் பாதீட்டு அட்டவணையைத் தயாரிப்பதன் மூலம் கிடைக்கபெறும் பயன்கள்

1. எதிர்காலத்தில் காசு மிகையொன்று ஏற்படுமாக இருப்பின் அதனை முன்னரே அறிந்துகொள்ள முடியுமாகையால் அக்காசினை சிறப்பாக முதலீடு செய்ய முடிதல்
2. எதிர்காலத்தில் காசுக் குறைபாடொன்று ஏற்படுமாக இருப்பின் அதனை முன்னரே அறிந்து கொண்டு அதற்கு முகங்கொடுப்பதற்கு ஆயத்தமாகலாம்.
3. உண்மையான காசுச் செயற்பாட்டுடன் ஒப்பிடுவதன் மூலம் காசு தொடர்பான திட்டமிடலும் கட்டுப்படுத்தலும் இலகுவாகும்.
4. வணிகக் கடன்களைப் பெறும்பொழுது வணிகத்தின் எதிர்கால நிதி நிலைமையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் துணையாக அமையும்.

( ½ ×4= 2 புள்ளிகள்)

ii. (அ) கொழும்பு பங்குச்சந்தையில் ஈடுபடுகின்ற நான்கு தரப்பினரைக் குறிப்பிடுக.

(அ) கொழும்பு பங்குச்சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடும் தரப்பினர்கள்

1. இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு
2. பொறுப்பாகவுள்ள வங்கிகள்
3. பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிகள்
4. முதலீட்டாளர்கள்
5. மத்திய வைப்பக முறைமைக் (தனியார்) கம்பனி
6. தரகு முகவர் நிலையங்கள்
7. நிதி அமைச்சு ( ½ ×4= 2 புள்ளிகள்)

(ஆ) திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யும் கொள்வனவாளர் ஒருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் யாவை?

(ஆ)

- திறைசேரி உண்டியல்களின் நன்மைகள்
- உயர்வட்டியைப் பெறலாம்
- அரச உத்தரவாதம்
- இடர் குறைவு
- முதிர்வு காலத்திற்கு முன் கழிவுடன் மாற்ற முடிதல்
- திரவத்தன்மை அதிகம். ( ½ ×4= 2 புள்ளிகள்)

iii. (அ) கொழும்பு பங்கு பரிமாற்றகத்தில் பாரியளவும், கூடிய திரவத்தன்மை கொண்டதுமான கம்பனிகளின் விலைமட்டங்களின் மாற்றங்களை அளவீடு செய்வதற்காக கணிக்கப்படும் சுட்டி யாது?

(அ) S & P இலங்கை 20 விலைச்சுட்டி S & P SL 20 Index (01 புள்ளி)

(ஆ) மேற்குறிப்பிட்ட சுட்டியை கணிப்பீடு செய்ய தெரிவு செய்யப்படும் கம்பனிகள் எக்காரணிகளை அடிப்படையாகக்கொண்டு தெரிவு செய்யப்படுகின்றன?

(ஆ)

1. சந்தை மூலதனமாக்கல்
2. திரவத்தன்மை
3. நிதிச் சாத்தியப்பாடு (01 புள்ளி)

(இ) பங்கு விலைச்சுட்டி கணிப்பீடு செய்வதன் முக்கியத்துவம் நான்கு தருக.

(இ) பங்குச் சந்தை விலைச் சுட்டிகள் கணிப்பீடு செய்வதன் முக்கியத்துவம்

1. பொருளாதாரச் செயற்பாட்டுத்தன்மை தொடர்பாகக் குறித்த விளக்கமொன்றைப் பெற்றுக்கொள்ள முடிதல்.
2. பொருளாதாரத்தில் கம்பனிகளின் செயற்பாட்டுத்தன்மை தொடர்பாகக் குறித்த விளக்கமொன்றைப் பெற்றுக்கொள்ள முடிதல்.
3. ஏனைய நாடுகளின் பங்குச்ச சந்தைகளின் நிலைமைகளோடு ஒப்பிட்டறியக்கூடியதாக இருத்தல்
4. முதலீட்டுத் தீர்மானங்களை எடுக்கும்போது இதனை துணையாகப் பயன்படுத்த முடிதல்

( ½ ×4= 2 புள்ளிகள்)

**iv.** தற்போது இயங்கி வருகின்ற பாதணி உற்பத்தி நிறுவனமொன்று தனது உற்பத்திக் கருமங்களை விரிவுபடுத்த தீர்மானித்துள்ளது. இதற்காக தேவையான ஊழியர்களின் எண்ணிக்கையினை திட்டமிடும் பொறுப்பு உங்களுக்கு வழங்கப்பட்டிருக்குமாயின் இது தொடர்பில் நீங்கள் கருத்தில் கொள்ளும் விடயங்கள் யாவை என்பதை சுருக்கமாக விவரிக்குக

1. பாதணி உற்பத்திப்பொருளுக்கு காணப்படும் கேள்வி
2. பாதணி உற்பத்தி நிறுவனத்தின் குறிக்கோள்
3. பாதணி உற்பத்தி மேற்கொள்ளப்படும் உற்பத்தி முறை
4. எதிர்காலத்தில் ஓய்வுபெற்றுச் செல்லும் ஊழியர்கள் தொடர்பான விபரங்கள்
5. விலகுதல், பதவி உயர்வு பெறல், நீக்குதல், சேவையினை முடிவுறுத்தல்.
6. பாதணி உற்பத்தி நிறுவனத்தின் நிகழ்கால மற்றும் எதிர்கால நிதிநிலைமை
7. பொருளாதார, சமூக, அரசியல் மற்றம் சட்டச்சூழல்

(மேற்கூறிய விடயங்களுடன் கூடிய விளக்கத்திற்கு 04 புள்ளிகள்)

V. (அ) வேலை விபரணமொன்றில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் நான்கு தருக.

(அ) தொழில் விபரணமொன்றில் பின்வரும் தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.

1. பதவியின் பெயர்
2. சேவைப் பிரிவு
3. தொழிலின் தன்மை
4. பதவிக்குரிய பணிகள் (கருமங்கள், கடமைகள், பொறுப்புக்கள்)
5. சேவை நிபந்தனைகள்
6. வேலை செய்ய வேண்டிய காலம்
7. ஊழியர் யாருக்குப் பெறுப்புக் கூற வேண்டும்.
8. மேற்பார்வை
9. செயற்றிறன் மதிப்பீட்டு விதிமுறைகள்
10. பதவியில் நிரந்தரமாக்கல்

(ஆ)இலத்திரனியல் ஈர்ப்பு முறை என்றால் என்ன? அதன் மூலம் கிடைக்கும் பயன்கள் இரண்டு தருக.

(ஆ) கணினியையும், வலையமைப்பையும் பயன்படுத்தி அமைப்பின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு துணையாக அமையக் கூடிய இயலுமையும், நேரான மனப்பாங்கும் கொண்ட தொழில் எதிர்பார்ப்பாளர்களை நிறுவனத்தினுள் ஈர்த்துக் கொள்வதற்கான செயல்முறையினைக் குறிக்கும். (01 புள்ளி)

நன்மைகள்

நிறுவனத்தின் ஈர்ப்பு செயற்பாடுகள் இலகுவாக அமையும்

கிரயம் குறைவு

காகிதாதி, எழுதுகருவிச் செலவுகள் குறைவடைதல் ( ½ ×2= 1 புள்ளி)